# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## இரண்டாம் தவணைப் பரீட்சை 2022

| தரம் :- 11 | பரதநாட்டியம் I<br>Dance ( Baratham) I | நேரம் :- 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|
| சுட்டெண்:............................... | 45 T I | |

கவனிக்க:

- ❖ எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.
- ❖ 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- ❖ உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை **(X)** இடுக.

1. வண்டுகள் தேன் குடித்து மயங்கின இவ்வாக்கியத்தில் “வண்டுகள்” என்பதை அபிநயிக்க பிரயேகாகிக்கப்படும் முத்திரை.
   1. பிரம்மரம் 2. கடகாமுகம் 3. கபித்தம் 4. கட்வா
2. அலாரிப்பின் ஆரம்பத்தில் இடம்பெறும் க்ரிவா போம்.
   1. திரச்சீனா 2. சுந்தரி 3. பிரக்கம்பிதா 4. பரிவர்த்திதா
3. பாத்திரப் பிராணன்களில் “வசோ” குறிப்பது.
   1. பாடும் ஆற்றல் 2. வேகம் 3. கண்பார்வை 4. துல்லியமான உச்சரிப்பு
4. திஸ்ர ஜாதி அடதாளம் எடுத்துக்கொள்ளும் அங்க அடையாளம்.
   1. $/_3/_3$**00** **2.** $/_3$**0**$/_3/_3$ **3.** $/_3$**0**$/_3$ **4.** $/_3$**00**
5. தட்சணமேரு என அழைக்கப்படும் நெடிதுயர்ந்த விமானத்தின் பெயரைக் கொண்ட ஆலயம்.
   1. தஞ்சைப்பெருங்கோயில் 2. சிதம்பரம் 3. திருவண்ணாமலை 4. திருத்தணிகை
6. கண்ணனுக்கும் யசோதைக்குமிடையிலான அன்பு.
   1. பக்தி பாவம் 2. சிருங்கார பாவம் 3. கருணா 4. வாத்ஸல்ய பாவம்
7. அண்ணாவியாரின் வழிகாட்டலில் ஆற்றுகை செய்யப்படுவது.
   1. காத்தவராயன் கூத்து 2. நாட்டுக் கூத்து
   3. கோலாட்டம் 4. கிராமிய நடனம்
8. வாமன அவதாரத்தை அபிநயிக்க பிரயோகிக்கும் முஸ்டிக்கை குறிப்பது.
   1. குடை, கமண்டலம் 2. குடை, குடம்
   3. கோடரி, குடை 4. கமண்டலம், திரிசூலம்
9. அங்காரகன் என அழைக்கப்படுபவர்.
   1. வியாழன் 2. ஞாயிறு 3. செவ்வாய் 4. புதன்

10. சிவனுக்குரிய ஹஸ்தத்தை எடுத்துக்கொள்ளும் தசாவதாரம்

1. நரசிம்மன் 2. ஸ்ரீராம அவதாரம் 3. வாமன அவதாரம் 4. கல்கி அவதாரம்

11. சித்திரம் தீட்டுதல் என்பதன் சமஸ்கிருதப் பெயர்.

1. கந்துக தாரனே 2. ப்ரதர்ஷனே
3. சித்ரே தல்லேகனே 4. ஏதஸ்ய

12. செல்வத்திற்கு அதிபதி.

1. குபேரன் 2. பிரகஸ்பதி 3. இந்திரன் 4. வருணன்

13. லகுடேபிச என்பதன் கருத்து.

1. கருடப்பறவை 2. பல்லக்கு 3. கோடரியால் வெட்டுதல் 4. கட்டில்

14. பஞ்ச நடைகளின் முழுச் சுற்றுக்களின் எண்ணிக்கை.

1. 28 2. 27 4. 24 4. 32

15. கண்ணீர் சிந்துவது போல் பாவனை செய்வது.

1. லோக தர்மி 2. வாத்ஸல்ய பாவம் 3. நாட்டிய தர்மி 4. கருணை

16. எட்டுவித மெய்ப்பாடுகளையும் புலப்படுத்தும் அபிநயம்.

1.ஆங்கிகம் 2. வார்ச்சிகம் 3. சாத்வீகம் 4. ஆஹார்யம்

17. கடற்தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களைச் சித்தரித்து ஆடப்படும் கிராமிய நடனம்.

1. மீனவ நடனம் 2. குறவன் குறத்தி நடனம்
3. அரிவு வெட்டு நடனம் 4. கொழுந்து நடனம்

18. வாள் நடனத்திற்குரிய பக்க வாத்தியம்.

1. மிருதங்கம், தபேலா, வயலின் 2. வுயலின், மிருதங்கம், நாதஸ்வரம்
3. உடுக்கு, சங்கு, தவில் 4. தபேலா, சங்கு, பேரிகை

19. சப்தத்தின் பகுதிகள் எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. கண்டிகைகள் 2. ஸ்வரங்கள் 3. முத்தாயிஸ்வரங்கள் 4. அனுபல்லவி

20. காம நினைவுகளை ஏற்படுத்தும் பாணம் எது.

1. அசோகம் 2. துாமரை 3. நீலோற்பலம் 4. முல்லை

21. பரதநாட்டிய சம்பிரதாய உடை.

1. சாறி தாவணி 2. பஞ்சகச்சம் 3. தாருபாச்சி 4. பாவாடை, தாவணி

22. குச்சுப்புடி நடனத்திற்கு பயன்படுத்தும் இசை.

1. சோபன இசை 2. கர்நாடக இசை 3. லைஹரோபா 4. மேலத்தேசய இசை.

23. கிருஷ்ணர், ஸ்ரீராமர் போன்ற உத்தம பாத்திரங்களுக்கான ஒப்பனை.

1. பச்சை 2. கத்தி 3. மினுக்கு 4. சிவப்புத் தாடி

24. கதகளியின் ஒப்பகைக்காரன் எவ்வாறு அழைக்கப்படுவர்.

1. தாமஸம் 2. சிங்கிடி 3. சௌட்டிக்காரன் 4. தரங்கம்

25. கி.பி 3ம் நூற் தொடக்கம் 6 ம் நூற் வரையான காலம்.

1. சங்ககாலம் 2. சங்கமருவிய காலம் 3. பல்லவர் காலம் 4. சோழர்காலம்

26. பயன் கருதி வேலனை வெறியாடச் செய்யும் நடனம்.

1. துணங்கை 2. வெறியாடல் 3. குரவை 4. பாணர்

27. சிருங்கார ரஸத்திற்குரிய ஸ்தாயி பாவம்

1. சிரிப்பு 2. வெறுப்பு 3. ரதி 4. அமைதி

28. சாகித்தியங்களைத் தாளத்திற்கு பாடப்படாமல் இராகமாக நீட்டிப் பாடப்படும் உருப்படி.

1. அஷ்டபதி 2. கீர்த்தனை 3. விருத்தம் 4. பதம்

29. வர்ணத்தின் உத்தராங்கம் எனும் பகுதியில் அடங்குபவை முறையே.

1. பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம் 2. சரணம், சரணஸ்வரம்.

3. பல்லவி, அனுபல்லவி, சிட்டைப்பல்லவி 4. சரணம், முத்தாயிஸ்வரம்

30. மதுர பக்தியை வெளிப்படுத்தும் உருப்படி.

1. கீர்த்தனை 2. பதம் 3.ஜாவளி 4. அஷ்டபதி

31. சிவபெருமான் முப்புரங்களை எரித்ததபோது ஆடிய தாண்டவத்தின் தொழில்.

1. படைத்தல் 2. அழித்தல் 3. மறைத்தல் 4. காத்தல்

32. அவுணர் மயங்குமாறு திருமகள் ஆடிய கூத்து.

1. பேடிக்கூத்து 2. மரக்காற்கூத்து 3. பாவைக்கூத்து 4. பாண்டரங்கம்

33. 11 வகை ஆடல் ஆடிய நடனமங்கை.

1. கோடியர் 2. மாதவி 3. கூத்தர் 4. கண்ணகி

34. பஞ்சரத்தின கீர்த்தனைகளுக்கு முதன் முதலில் நடனவடிவம் அமைத்தவர்.

1. மீனாட்சி சுந்தரம்பிள்ளை 2. வழுவூர் இராமையாப்பிள்ளை

3. க.பொன்னனையா 4. பாலசரஸ்வதி

35. குறிஞ்சி நில மக்களால் ஆடப்பட்டவை

1. ஆய்ச்சியர் குரவை 2. குன்றக்குரவை

3. பாண்டரங்கம் 4. வேட்டுவவரி

- 36 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலுமுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

36. ஆடலில் தேர்ச்சி பெற்றோர் சங்க காலத்தில் ……………………என அழைக்கப்பட்டனர்.

1. வைணீகர் 2. பாணர் 3. பாடினியர் 4. கூத்தர்

37. தாளம் ஆரம்பித்த பின்னர் ஜதி ஆரம்பிப்பது ……………..எனப்படும்.

1. விசம எடுப்பு 2. அதீத எடுப்பு 3. சம எடுப்பு 4. ஆநாகத எடுப்பு

38. சம நிலையை பேணி ஆடும் நடனம் ………………. ஆகும்.

1. கரகம் 2. காவடி

3. கும்மி 4. கோலாட்டம்.

39. பரத நாட்டியத்தில் ஜதிகளைச் சொல்பவர் ……………ஆவார்.

1. நட்டுவனார் 2. வித்துவான் 3. அண்ணாவியார் 4. வைணிகர்

40. ……………….. என்னும் இலக்கண நூல் வழுவூர் இராமையாப்பிள்ளை அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது.

1. தெய்வீக ஆடற்கலை 2. சிலப்பதிகாரம் 3. இசையியல் 4. சீவகசிந்தாமணி